செ.வெ.எண் :26/அக்டோபர் நாள்: 12.10.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## வைரஸ் காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியம், முள்ளிக்குடி கிராமப் பகுதியில் இன்று (12.10.2019) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று, வட்டார மருத்துவ அலுவலர் குழுவினர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கினார்.

வடகிழக்கு பருவமழை துவங்கவுள்ளதையொட்டி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் தற்போது பரவலாக மழை பெய்து வருகின்றது. இத்தகைய சூழ்நிலையில் டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின்படி, மாவட்டத்திலுள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் அந்தந்த உள்ளாட்சி அமைப்பு சார்ந்த பணியாளர்கள் மூலம் தொடர்ந்து சுற்றுப்புறத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, குப்பை/தண்ணீர் தேங்காமல் சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரித்தல், கொசுப்புழு ஒழித்தல் (Source reduction), புகைமருந்து அடித்தல் (Fogging) போன்ற பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் காய்ச்சலுக்காக சிகிச்சை பெற வருவோர் குறித்து உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பிட்ட கிராமப் பகுதிகளிலிருந்து அதிகமானோர் சிகிச்சைக்காக வரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட கிராமத்தில் சுற்றுப்புற தூய்மைப் பணிகள் மேற்கொள்ள (Mass Cleaning Activities) அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுதவிர, பொதுமக்களுக்கு வைரஸ் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையிலும், பொதுமக்கள் நலனுக்காக சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட ஏதுவாகவும் 33 நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு ஊரகப் பகுதிகளில் வைரஸ் காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இம்மருத்துவ குழுக்கள் மூலம் ஊரகப் பகுதிகளிலுள்ள கிராமப் பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர், ORS உப்புக்கரைசல் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியம், முள்ளிக்குடி கிராமப் பகுதியில் இன்று (12.10.2019) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று, வட்டார மருத்துவ அலுவலர் குழுவினர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கினார்.

மேலும், கிராமப் பகுதிகளில் குப்பை தேங்காமல் சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரித்திட வேண்டுமெனவும், தண்ணீரை காய்ச்சி பருகிட வேண்டுமெனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கினார். காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் பதற்றம் அடையாமல் அருகிலுள்ள அரசு மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று சிகிச்சை பெற்று மருத்துவர்களின் ஆலோசனைப்படி மருந்துகளை உட்கொள்ள வேண்டும். மருத்துவர்களின் ஆலோசனை இல்லாமல் சுயமாக உட்கொள்வதை கண்டிப்பாக தவிர்த்திட வேண்டும் என பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்வின்போது, வட்டார மருத்துவ அலுவலர் மரு.சுகந்தி போஸ் உடனிருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**